ஆ, அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*51. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 5) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 35/1978).

*52. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1978).

*53. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (நியாய வாரம் செலுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/1978).

*54. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகை தாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1978).

†55. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாவது (ஆறாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை.

†56. 1972-73 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகளின் மீதும், இந்திய தணிக்கைத் துறை தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கையின் மீதுமான பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.

†57. உடுக்குறியிடாத வினாப்பட்டியல் (351 முதல் 400 வரை).

இணைப்பு I

[502-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 185-க்கான விடையைக் காண்க].

விவரமான அறிக்கை.

1961-ம் ஆண்டு இரவீந்திரநாத் தாகூர் நூற்றாண்டு விழாவினை ஒட்டி இந்திய அரசு மாநிலங்களில் இரவீந்திரர் கலை அரங்கம் கட்ட வேண்டுமென்று ஒரு திட்டம் தயாரித்து அதன்படி அக்கலை அரங்கத்தை கட்டி முடிப்பதற்கு ஒவ்வொரு மாநிலத்திற்கும் இந்திய அரசின் பங்காக ரூ. 2.75 லட்சம் மானியம் அளிக்க முன் வந்தது. இத்திட்டத்தை ஏற்று இவ்வரசு சென்னையில் இரவீந்திரர் கலை அரங்கு கட்டி முடிக்க சென்னை நுங்கம்பாக்கம் கிரிம்ஸ் ரோட்டில் சுமார் 64 கிரவுண்டு நிலம் ஒதுக்கீடு செய்தது.

---

* 12-9-1978 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றது.

† 12-9-1978 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றது.

[1978 செப்டம்பர் 13

மேலும் அரங்கத்தைக் கட்டுவதற்கான வரைபடங்கள், மதிப்பீடுகளுக்கு ஒப்புதலளித்து அதனடிப்படையில் அரங்கத்திற்கான அஸ்திவாரமும் சில கட்டிடப் பகுதிகளும் ரூ. 3.75 லட்சத்திற்கு கட்டப்பட்டது. 1962-ம் ஆண்டு சீன ஆக்கிரமிப்பாலும் பின்னர் 1964-65-ல் பாகிஸ்தான் படையெடுப்பாலும் நாட்டில் அவசரநிலை பிரகடனமானபோது இக்கட்டிட வேலையை அரசு நிறுத்த வேண்டியதாயிற்று. மீண்டும் 1971-ல் கட்டிட வேலைகளைப் புதிதாகத் தொடங்க எண்ணியபோது விலைவாசி ஏற்றத்தின் காரணமாக இவ்வரங்கை கட்டி முடிப்பதற்கு அதிகச் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டது. இதற்கிடையில் பாரதியார் நினைவுச் சங்கத்தினர் பாரதி நினைவு அரங்கம் கட்டுவதற்கு தேவையான நிலத்தை ஒதுக்கித்தர வேண்டுமென்று அரசை வேண்டினர். பாரதி நினைவு அரங்கம் கட்டுவதற்குப் புதிதாக நிலம் ஒதுக்கீடு செய்வதற்குப் பதிலாக, இரவீந்திரர் கலை அரங்கு கட்டும் இடத்தையும், கட்டிடப் பகுதிகளையும் பாரதி நினைவு சங்கத்திற்கு அளித்து 'இரவீந்திரர்—பாரதி' கலை அரங்கம் கட்டி முடிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம் என இவ்வரசு முடிவெடுத்தது. இதற்கு இணங்க இரவீந்திரர் அரங்கைக் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட 64 கிரவுண்டு நிலத்தையும் அதில் கட்டி முடிக்கப்படாமலுள்ள கட்டிடத்தையும் பாரதியார் நினைவு சங்கத்திற்கு அளித்து, அதனைக் கட்டி முடித்தபின் இரவீந்தரர் கூடமென்றும், பாரதியார் அரங்கு என்றும்—அழைக்க வேண்டுமென்று 31-10-74 நாளிட்ட கல்வித்துறை ஆணை (நிலை) 1869-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. பாரதியார் சங்கம் இன்னும் கட்டிட வேலையை ஆரம்பிக்கவில்லை. தற்பொழுது தமிழ்நாடு இயல், இசை, நாடகமன்றம் மேற்சொன்ன இடத்தில் பாரதியார் நினைவுச் சங்கத்துடன் சேர்ந்து கலை அரங்கை கட்டி முடித்து அதனை தன் பொறுப்பில் வைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுள்ளது. இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

இணைப்பு II

[518-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 197—க்கான விடையைக் காண்க]

28—6—1977—நாளிட்ட அரசாணை எண் 1520-ன் படியும், அதற்குப் பின் திருத்தப்பட்ட ஆணையின் படியும் அரசு மருத்துவமனைகளிலும் உருக்கி நோய் மருத்துவமனைகளிலும் (அரசு அல்லது அரசு உதவி மானியம் பெறும் மருத்துவமனைகள் உட்பட) அரசு அலுவலர்கள், மற்றும் ரூ. 300-க்கு குறைவாக ஊதியம் பெறும் உள்ளாட்சித்துறை அலுவலர்கள் சிறப்பு